*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*11 12 2025 THURSDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மணிப்பூரில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.*
- *மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினத்தை ஒட்டி குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.*
- *சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, கிராமப்புற மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*
- *பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுவதற்கான கட்டணம் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*
- *ஆசிய தற்காப்புக்கலை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kushboo Nishad தங்கப்பதக்கம் வென்றார்.*

*>>>>><<<<<*

*குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, மணிப்பூரில் இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.*

*மணிப்புரி பெண்களுக்கு எதிராக ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கடைபிடித்த கொள்கைகளை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சியை நினைவுகூரும் விதமாக, இம்பாலில் நடைபெறும் Nupi Lal தின நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.*

*அதன்பின், இம்பால் மற்றும் சேனாபதி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கும் குடியரசுத்தலைவர் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.*

*>>>>><<<<<*

*மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அச்சமற்ற தேசியவாதியும், தொலைநோக்கு பார்வை*

*கொண்ட சமூக சீர்திருத்தவாதியுமான பாரதியார், தமிழுக்கும், நாட்டின் விடுதலைக்கும் அயராது பாடுபட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்துவதில், மகாகவி பாரதியாரின் பங்களிப்பு ஈடுஇணையற்றது என்று கூறியுள்ளார்.*

*அவரது கவிதைகள், துணிவை தூண்டியதாகவும், அவரது சிந்தனைகள் எண்ணற்ற மக்களின் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றலை கொண்டிருந்ததாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.*

*மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள பதிவில், தமது வீரம்செறிந்த கருத்துகள் மற்றும் உறுதிமிக்க தேசபக்தி பாடல்கள் மூலம், இளைஞர்களிடையே விடுதலை உணர்வை மேலோங்கச் செய்தவர் பாரதியார் என்று தெரிவித்துள்ளார்.*

*இதனிடையே, தமிழகத்தில் சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள பாரதியார் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு. சாமிநாதன், திரு. சேகர்பாபு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்*

*>>>>><<<<<<*

*முன்னாள் குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜியின் பிறந்த நாளையொட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.*

*குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசுத்தலைவர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜியின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மிகச் சிறந்த அரசியல்வாதியான பிரணாப் முகர்ஜி, தேசப் பணிக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், ஆழ்ந்த ஞானம் கொண்டவரான பிரணாப் முகர்ஜி, தமது பொதுவாழ்க்கையில் அர்ப்பணிப்பு உணர்வுடன் நாட்டிற்காக பாடுபட்டவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.*

*அவரது அறிவாற்றலும், தெளிந்த சிந்தனையும் ஜனநாயக நடவடிக்கைகளை செழுமைப்படுத்தியதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.*

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில். அரசியல் சாசனத்தின் நுணுக்கங்களை தெளிவாக அறிந்தவரான பிரணாப் முகர்ஜி, தமது பதவிக்காலத்தில் அதனை சிறப்பாக செயல்படுத்தியவர் என்று தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக, கிராமப்புற மக்களின் வாங்கும் திறன் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக நபார்டு வங்கியின் ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கிராமப்புறங்களில் வசிக்கும் 80 சதவீத மக்கள் தங்களது மாத வருவாயில் சுமார் 67 புள்ளி மூன்று சதவீதத்தை பொருட்களை வாங்க செலவிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது, மக்களின் தேவை அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*கிராமப்புற குடும்பங்களில், 42 சதவீதத்திற்கும் மேற்பட்டோரின் வருவாய் அதிகரித்துள்ளதாகவும் நிதியமைச்சகம் கூறியுள்ளது.*

*>>>>><<<<<*

*பெட்ரோலில் 20 சதவீதம் அளவிற்கு எத்தனால் கலக்கப்படுவதன் காரணமாக, கரியமில வாயு வெளியேற்றம் 736 லட்சம் மெட்ரிக் டன் குறைந்துள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.*

*மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், எத்தனால் பயன்படுத்துவதன் மூலம், காற்றுமாசு குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.*

*இத்திட்டத்தின் மூலம் கரும்பு விவசாயிகளின் வருமானமும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.*

*நாட்டில் தற்போது, ஆண்டுக்கு 22 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதை சுட்டிக்காட்டிய திரு. நிதின் கட்கரி, நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு,*

*புதைபடிம எரிபொருள் இறக்குமதியை குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.*

*>>>>><<<<<<*

*பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுவதற்கான கட்டணம் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இதுதொடர்பாக அமைக்கப்பட்ட குழு, பல்வேறு பத்திரிகை சங்கங்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தி, அளித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பதாக கூறினார்.*

*மூலப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் டிஜிட்டல் தளங்களால் அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் போட்டியை சமாளிக்க ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.*

*>>>>><<<<<<*

*தமிழகத்தின் குலசேகரபட்டிணத்தில் அமைக்கப்பட்டு வரும் ராக்கெட் ஏவுதளத்திலிருந்து 2027ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ராக்கெட்டுகள் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.*

*நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள இஸ்ரோ மையத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ககன்யான் விண்கலத்தை 2027ஆம் ஆண்டுக்குள் விண்ணில் செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.*

*(சவுண்ட் பைட் - நாராயணன் 54 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<<*

*கேரளாவில் உள்ளாட்சித் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது.*

*திருச்சூர், பாலக்காடு, வயநாடு உள்ளிட்ட 7 மாவட்டங்களில் அடங்கிய 604 நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான இத்தேர்தலில் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.*

*மூன்று மாநகராட்சிகள், 47 நகராட்சிகள், 7 மாவட்ட ஊராட்சிகள், 77 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 470 கிராம பஞ்சாயத்துகளில் 2 ஆயிரத்து 55 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை எனக் கண்டறியப்பட்டு, கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*இதனிடையே, தெலங்கானா மாநிலத்தில் கிராமப் பஞ்சாயத்து தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெற்று வருகிறது.*

*மூவாயிரத்து 834 கிராமப் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் 27 ஆயிரத்து 628 வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு பிற்பகல் 1 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.*

*இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் பிற்பகல் 2 மணி முதல் எண்ணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<<*

*ஆசிய தற்காப்புக்கலை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kushboo Nishad தங்கப்பதக்கம் வென்றார்.*

*லெபனானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் அவர் தஜுகிஸ்தானின் Barfina-வை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>><<<<<<*

*ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Kiren George காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-18 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Dendi Triansyah-ஐ வென்றார்.*

*மற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் வெற்றிபெற்று, Rounak Chouhan, Shankar Muthusamy Subramanian, Satish Kumar ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் Unnati Hooda, Anupama Uppadhyaya, Tasnim Mir ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.*

***>>>>>END<<<<<<***